அனுப்புநர்
திரு.த.சீனிவாசன்,
முதல்வர்,
மாவட்ட ஆசிரியர் கல்வி
மற்றும் பயிற்சி நிறுவனம்,
கிருஷ்ணகிரி மாவட்டம்.

பெறுநர்
முதன்மைக் கல்வி அலுவலர்கள்,
முதன்மைக் கல்வி அலுவலகம்,
கிருஷ்ணகிரி, கடலூர், தஞ்சாவூர்,
சென்னை, தருமபுரி, நீலகிரி, மதுரை,
தூத்துக்குடி, தேனி, சேலம், திருச்சி,
திருநெல்வேலி, கரூர், நாமக்கல்,
திண்டுக்கல், விருதுநகர், வேலூர்,
கன்னியாக்குமரி, திருவள்ளூர், திருப்பூர்,
கோயம்பத்தூர், செங்கல்பட்டு,
நாகப்பட்டினம்.

ந.க.எண்:00406/அ5/2020 நாள்: 24.08.2021

அய்யா/ அம்மையீர்:

பொருள்: கிருஷ்ணகிரி, மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும்பயிற்சி நிறுவனம் 2021 மற்றும் 2022 ஆம் கல்வியாண்டிற்கான 11 ஆம் மற்றும் 12 ஆம் வகுப்பு அரசியல் அறிவியல் பாடப்பிரிவில் மதிப்பீடு வினாக்கள் தயார் செய்தல் – தொடர்பாக.

பார்வை: சென்னை 06– மாநிலக்கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இயக்குநரின் செயல்முறை ந.க.எண் 4244/ஈ1/2020 நாள் 03.08.2021

------------

பார்வையில் காணும், சென்னை–06– மாநில கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இணை இயக்குநர் அவர்களின் அறிவுறுத்தலின் படி இந்நிறுவனத்திற்கு (DIET– KRISHNAGIRI) ஒதுக்கப்பட்ட அரசியல் அறிவியல் 11 மற்றும் 12 ஆம் வகுப்பிற்கு ஒரு அலகிற்கு குறைந்தபட்சம் 200 பலவுள் தெரிவு வினாக்களை (MCQs) தமிழ் மற்றும் ஆங்கில மொழியில் தயாரிக்க வேண்டியுள்ளது. இப்பணியினை இணைப்பில் உள்ள ஆசிரியர்கள் இணைய வழியாக மேற்கொள்ள இருப்பதால் 24.08.2021 to 28.08.2021 வரை பணியிலிருந்து விடுவிக்குமாறு கனிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், 11 ஆம் மற்றும் 12 ஆம் வகுப்பு அரசியல் அறிவியல் மதிப்பீட்டு வினாக்களை ஆங்கில வழியில் மொழிபெயர்த்திட ஓர் அரசியல் அறிவியல் பாட ஆசிரியருக்கு மொழிபெயர்ப்பில் சிறந்த ஓர் ஆங்கில ஆசிரியரை நியமிக்குமாறும் இப்பணியினை விரைவாக முடிக்க தட்டச்சு செய்யும் பொருட்டு மண்டல

ஒருங்கிணைப்பாளருக்கு இரண்டு தட்டச்சர்களை பணியில் ஈடுபடுத்துமாறும் முதன்மைகல்வி அலுவலர்களை கனிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

**இணைப்பு** : 1. ஆசிரியர் பெயர் பட்டியல், ஒருங்கிணைப்பாளர் (ம) பணி ஒதுக்கப்பட்ட அலகின் விவரம்

2. மீளாய்வாளர் பெயர் பட்டியல்

24/8/21

**முதல்வர்**
**மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும்**
**பயிற்சி நிறுவனம், கிருஷ்ணகிரி.**

**நகல்:**

இயக்குநர், மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை–06, (தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது)